1994 மே 4] திரு. சி. ஞானசேகரன்

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்).

அ) தமிழ்நாடு பொதுச்சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1994).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தல்.

1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு. (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1994) மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (@) (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டத் திருத்த சட்டமுன்வடிவு விவாதத்தில் கலந்துகொள்வதில் எனக்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கும் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த தமிழ்நாடு பொது சொத்து (சேதம் மற்றும் இழப்பு) தடுத்தல் சட்டத்தில் பொது சொத்துக்கு மட்டும் சேதம் ஏற்படுகிறபோது அதிலே இழப்பீடு பெறுவதற்கான வசதிகள் அந்த சட்டத்திலே செய்யப்பட்டது. ஆனால் பின்னாலே, இன்று தனியார் சொத்துகளும், பேருந்துகளும், அதுபோன்றே பல அலுவலகங்களும் தாக்கப்பட்டு அவர்களுக்கும் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தினாலே அதையும் நாம் வசூலிப்பதற்கான சட்டத்தை, தனியாருடைய சொத்திற்கும் சேர்த்து, இங்கே

(@) 29-4-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப்பெற்றுள்ளது.

1994 மே 4] [திரு. ஏ. ஞானசேகரன்]

கொண்டு வருகிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால் ஒன்றை மட்டும் நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் ஏற்கனவே 1992-ஆம் ஆண்டு இந்த பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) சட்டத்தைக் கொண்டு வந்தோம். சட்டம் கொண்டு வந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஏதாவது ஒரு வழக்கைத் தொடுத்து யாரிடமாவது நஷ்டத்தைப் பெற்று இருக்கிறோமா என்று சொன்னால் இல்லை. This Act actually remains as a dead letter. நாம் சட்டத்தை மட்டும் இயற்றிவிட்டு ஏதோ சட்டத்தை இயற்றிவிட்டோம் என்று மட்டும் சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்துகிற விதத்தில்தான், நமக்கு நம்முடைய நோக்கம் இந்த இடத்தில் நிறைவேறியதாக பொருள் கொள்ளப்படும். சமுதாய மக்களும் அதை ஏற்றுக் கொள்வார்கள். இதிலே 1992 க்கு இந்த பிரின்சிபல் ஆக்டை கொண்டு வந்து இதுவரை எத்தனையோ பஸ்கள் தாக்கப்பட்டன. எத்தனையோ அலுவலகங்கள் தாக்கப்பட்டன, எத்தனையோ பொதுச் சொத்துக்கு நஷ்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை ஒருவரிடமிருந்தும் நஷ்ட ஈட்டைப் பெறவில்லை. இப்படி இருக்கிறபோது, இது சரியாக வராது. இப்போது தனியார் சொத்துக்கு இதை நாம் சேர்க்கிறோம். சேர்த்த பின்னாலும் கூட, நீங்கள் இந்த ஆக்டிலே கூட ஏதாவது 'அத்தாரிட்டி' என்று குறிப்பிட்டிருக்கிறீர்களா? நாம் ஏதோ ஒன்று, எனக்கு இவ்வளவு நஷ்டம் என்று ஒரு அத்தாரிட்டி குறிப்பிடுகிற அளவில் வகைப்படுத்துகின்ற ஒரு அத்தாரிட்டியிடம் கொடுக்கவேண்டும் என்று ஏற்கனவே நீங்கள் அதை சொல்லியிருக்கின்றீர்களா? ஆனால் அந்த அத்தாரிட்டி யார் என்று கூட இன்னும் நமக்கு தெரியவில்லை. இந்த சட்டத்திலே ஏற்கெனவே சென்ற பிரின்சிபல் ஆக்டிலே போடுகிறபோது அந்த அத்தாரிட்டி கொடுக்கக்கூடிய தீர்ப்பின் மீது அப்பீலே கிடையாது என்கின்ற ஒரு புரோவிஷன் அப்போது கொண்டு வந்தீர்கள். இப்போது அதையும் மாற்றி, அதே 11 வது செக்ஷனிலே அந்த அத்தாரிட்டி யார் என்பதை நீங்கள் நிர்ணயிப்பதாக சொல்லியிருந்தீர்கள். இதுவரை அந்த அத்தாரிட்டி யார் என்றே நாட்டு மக்களுக்குத் தெரியவில்லை.

அடுத்து அந்த அத்தாரிட்டி கொடுக்கக்கூடிய தீர்ப்பின்மீது மேல்முறையீடு செய்யலாம் என்கின்றதை இப்போது செக்ஷன் 12-ஏ-யில் சேர்த்திருக்கிறீர்கள். அதிலே கூட அத்தாரிட்டி யார் என்று சொல்லப்படவே இல்லை அதிலே அத்தாரிட்டி யார் என்று சொல்வதற்கே 4, 5 ஆண்டுக் காலம் ஆகிவிட்டால் இன்றைக்கு நாம் இந்த சட்டத்தை எந்த இடத்திலே செயலாக்கம் கொடுத்து நாம் இந்த நஷ்ட ஈட்டைப் பெறப்போகிறோம் என்று எனக்குப் புரியவில்லை. இதிலேயும் கூட 12-ஏயிலே

[1994 மே 4 [திரு. சி. ஞானசேகரன்]

" Any person arranged by an order made by the authority prescribed under sub-section (1) of section 11 may, within such period and in such manner as may be prescribed, appeal to such authority as may be specified by the Government in this behalf. " இதிலே அத்தாரிட்டியே யார் என்றே இன்னும் சொல்ல வில்லை. இந்த ஆட்சியிலே சொல்லவில்லை. இப்படி அத்தாரிட்டியே யார் என்று சொல்லாமல், நாம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறோம். எந்த திசையிலே பயணம் செய்துகொண்டிருக்கிறோம் என்று தெரியவில்லை, ஆகவே நீங்கள் எந்த அத்தாரிட்டியைப் போடப்போகின்றீர்கள் என்று தெரியாத சூழ்நிலையில, இதுபோன்ற சட்டங்களை நாம் கொண்டுவந்தும் எந்தவிதமான பலனும் இல்லை. ஆகவே நான் தங்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், தமிழக அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம் முதலிலே அத்தாரிட்டி யார் என்று நீங்கள் ஃபிக்ஸ் செய்து கொள்ளவேண்டும். அந்த அத்தாரிட்டியே கூட யாராவது நீதிமன்ற நீதிபதியாக இருக்கலாம் அல்லது ஒருவேளை ரிட்டையர் ஆன ஜட்ஜ்கூட போடலாம். ஒரு வேளை ஆபீசரே நீங்கள் போட்டுவிட்டால் அந்த ஆபீசர் எந்த ஜட்ஜ்மெண்ட்டை எப்படி சொல்வார் என்று நமக்குத் தெரியாது. ஆகவே ஒரு ஜுடீஷியல் ஆபீசரை, இப்போது இருக்கக்கூடிய ஒரு டிஸ்டிரிக்ட் ஜட்ஜ் என்றே கூட வைத்துவிடுங்கள் இல்லை என்று சொன்னால் ரிட்டையரான ஹைக்கோர்ட் ஜட்ஜ் என்று வைத்துவிடுங்கள். அவரிடம் தான் அதை செய்ய வேண்டுமென்று நீங்கள் அந்த அதாரிட்டியை யார் என்று உடனடியாக ஃபிக்ஸ் செய்தால்தான் இந்த ஆக்டை நாம் கொண்டு வருவதில் பலன் இருக்கும். இப்பொழுது 2 ஆண்டுகளாகி விட்டன. இன்னும் இப்படி நாம் சட்டங்களை தான் போடுகிறோமே ஒழிய இதுவரை எத்தனைபேர பஸ்கள் எல்லாம் கொளுத்தப்படுகிறது, நசுக்கப்படுகிறது, கண்ணாடி உடைக்கப்படுகிறது என்ற செய்திகள் வந்த வண்ணம் இருந்தாலும் கூட இதுவரை ஒரு பைசா கூட நாம் யாரிடமிருந்தும் வசூல் செய்யவில்லை. அரசுக்கு இவ்வளவு நஷ்டம் என்று சொல்கிறோம். ஒரு பைசா கூட நாம் வசூலிக்காத ஒரு கட்டத்தில் இது போன்ற சட்டங்கள் டெட் லெட்டராக, ஒரு ஏட்டளவிலே இருந்து விடுவது அவ்வளவு நல்லதல்ல என்பதை மாத்திரம் நான் இந்த இடத்திலே சுட்டிக்காட்டி நீங்கள் உடனடியாக இந்தக் குறையை நிவர்த்தித்த பிறகு இந்தத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிப்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக

சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்பொழுது தனியார் சொத்துக்கும் சேதம் விளைவிப்பவர்கள் மீதும் தண்டனை வழங்குவதற்கான சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால பொதுவாக இங்கே சொல்லப்பட்டிருக்கிறது என்பது, அரசியல் கட்சிகளின் ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், இப்படி நடைபெறுகின்ற போது, அதனால் தனியார் சொத்துக்கு சேதம் ஏற்படுகிற போது, அதற்கு நஷ்ட ஈடு அல்லது தண்டனை வழங்கப்படவேண்டுமென்று அந்தச் சட்டத்தோடு இதை இணைக்கின்ற ஒரு சட்டமாக இது கொண்டு வரப்படுகிறது. ஆனால், அரசியல் கட்சிகள், ஊர்வலங்கள் அல்லது பொதுக் கூட்டங்கள் அல்லது பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகிறபொழுது இதிலே தனியார் என்று சொல்லும்போது இது போல பொதுச் சொத்துக்கு அல்லது தனியார் சொத்துக்கு சேதம் விளைவிப்பது என்ற எண்ணம் எந்த அரசியல் கட்சிகளுக்கும் கிடையாது. சமூக விரோதச் செயல்களில் ஈடுபடக் கூடியவர்களால் இப்படி திடீர் என்று ஒரு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. அதனுடைய விளைவாக எதிர் காலத்தில் அரசியல் கட்சிகள் நடத்தக்கூடிய எந்த இயக்கத்தின் பொதுக் கூட்டம், ஆர்ப்பாட்டமாக இருந்தாலும் அதைத் தனியார்கள் வேண்டுமென்றே சில அரசியல் கட்சிகளின் காழ்ப்புணர்ச்சி உடையவர்கள் அந்த இயக்கம்தான், அந்தக் கட்சிக்காரர்கள்தான் செய்தார்கள் என்று சொல்லி அந்தக் கட்சி மீது ஒருவழக்கு தொடருவதற்கு ஏதுவாக இது அமைய இருக்கிறது என்பதுதான் என்னுடைய கருத்தாகும். அந்த வகையிலே, காலத்திலே ஜனநாயக முறைப்படி அரசியல் கட்சிகள் செயல்படுகிறபோது, அரசியல் கட்சிகள், ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், பல்வேறு இயக்கங்கள் நடைபெறுகிற போது, அப்படி சேதம் ஏற்படுகிற போது, ஆய்வு செய்து, நியாயமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அப்படி எடுப்பதற்கான சட்டத் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இதிலே தனியார் சொத்துக்கு சேதம் என்ற பெயரில் எதிர்காலத்திலே ஜனநாயக முறைப்படி செயல்படுகின்ற அரசியல் கட்சிகள் பாதிக்கப்படக் கூடாது. அந்த வகையிலே சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு பொதுச்சொத்துக்களுக்குசேதம் விளைவிக்கின்றவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற இந்தச் சட்டத்தின் மூலம் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், மதக் கிளர்ச்சிகள், கோஷ்டிச் சண்டைகள் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின்போது ஏற்படுகின்ற சேதாரத்துக்கு நஷ்ட ஈடு கொடுக்க இது வகை செய்கிறது. அதற்காக இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதிலே, குறிப்பாக

[திரு. ஜீ. பழனிசாமி]

ஏற்கெனவே இதற்கான சட்ட விதிகள் இருக்கின்றன. இதைப் பொறுத்தமட்டில், அரசியல் கட்சிகளுககும் என்று இதிலே இணைப்பது என்பது சரியல்ல. காரணம், குழுக்கள், மதக் குழுக்களாக, கோஷ்டிச் சண்டைகளாக, இனப பிரச்சினையாக நடைபெறுகிற தகராறில் அவர்கள் மீது சட்ட ரீதியாக நடவடிக்கை நீங்கள் எடுக்க வேண்டும். அதைப்போன்று பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படும்போதுகூட பெரும் பகுதி அரசியல் கட்சிகள் சேதப்படுத்துவது கிடையாது. பெரும் பகுதி ஒரு ஜனநாயகப் பூர்வமாக செயல்படுகிற கட்சிகள் இது போன்று பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துவது, பஸ்களை அடித்து உடைபபது போன்ற விதத்தில் சொத்துக்களை சேதப் படுததுவதை நாங்கள் ஏற்கவும் தயாராக இல்லை. இதிலே அரசியலகட்சிகளின், அரசினுடைய காழ்ப்புணர்ச்சி காரணமாக அல்லது ஒரு கட்சி ஜனநாயப் பூர்வமாகவும், ஊர்வலம், ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் நடத்தும்போது எதிர் அணியைச் சேர்ந்தவர்கள் கலவரத்தை உண்டுபண்ணும் போது அவர்கள் சம்பந்தம் இல்லாமல் அந்த இயக்கத்தை நடத்தக் கூடியவர்கள் மீது பழி சுமத்தி தண்டனை வழங்கக் கூடிய அபாயம் இதிலே வருகிறது. ஆகையினால், இதிலே இருந்து அரசியல் கட்சிகள் என்று இருப்பதை எடுத்துவட வேண்டும். அதற்கு மாறாக, ஆர்ப்பாட்டங்கள், பொதுக் கூட்டங்கள், அரசியல் கட்சிகள் நடத்தக்கூடிய இயக்க மாநாடுகளில் காவல்துறையினுடைய பந்தோபஸ்தைத்தான் இதிலே ஈடுபடுத்தி ஆவன செய்ய வேண்டும்.

முற்பகல் 11-40.

குறிப்பாக, சமீபத்திலே கூட சென்னையிலே பல ஆயிரக் கணககான பேர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். ஒரு கட்சிக்குள்ளே இருக்கிற கோஷ்டித் தகராறுகள் வராமல் பாதுகாத்தோம் எனறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகப் பெருமையோடு இந்த அவையிலே சொன்னார்கள். நாங்கள் நினைத்து இருந்தால, ஒருவருடைய கட்சியினுடைய அலுவலகம் கூட தரை மட்டமாக ஆகி இருக்கக் கூடும், தமிழ்நாட்டினுடைய காவல் துறை சரியான நடவடிக்கை எடுத்ததன் காரணமாக, தமிழ்நாடு காவல் துறை சரியான பந்தோபஸ்து கொடுத்ததன் காரணமாக, சட்டம் ஒழுங்கு பராமரிக்கப்பட்டு, இன்றைக்குப் பாதுகாத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் போன்று தான் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மாநாடுகள் அல்லது மிகப் பெரிய இயக்கங்கள் நடத்தும் போது அரசியல் கட்சிகளுக்கு பந்தோபஸ்து கொடுக்க வேண்டும், பொதுச் சொத்துகளுக்கு அரசாங்கம் பந்தோபஸ்து கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் யாரோ ஒரு சில சமூக விரோதிகளால் நடத்தப்படும் அந்த அசம்பாவிதங்களுக்கு கட்சியிடமிருந்து, கட்சித் தலைவர்களிடமிருந்து நஷ்ட ஈடு கேட்பது என்பது சரியல்ல. எனவே, ''அரசியல் கட்சி'' என்று போட்டிருப்பதை எதிர்த்து, இந்தச் சட்டத்தை மறுத்து, நான் அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1994) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிற போது, மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தச் சட்டம் உருவாக்கப் பெற்று, இந்த அவையிலேயே முழுமனதாக நிறைவேற்றப் பட்டிருக்கிறது. ஆக, இப்போது இரண்டு திருத்தங்கள் மட்டும் இதிலே கொண்டு வரப்படுகின்றன. இந்தச் சட்டத்தைச் சீராக வும் அமைக்க வேண்டும், செம்மையாகவும் அமைக்க வேண்டும், முறையாகவும் அமைக்க வேண்டும், வழி வகைகளும் கொண்ட தாக இருக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் பொதுச் சொத்து என்று போட்டுவிடுவோமானால், தனியார் சொத்து பாதிக்கப்படுகிறபோது இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவர முடி யாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடும் என்பதால்தான் பொதுச் சொத்து என்பதற்குப் பதிலாக சொத்து என்று பொதுவாகப் போட்டால் பொதுச் சொத்தாக இருந்தாலும், தனியார் சொத் தாக இருந்தாலும், அவை பாதிக்கப்படுகிற சூழ்நிலையிலே நட வடிக்கைகளை மேற்கொள்ளலாம். மற்றொன்று, நாம் நிறை வேற்றிய அத்தகைய சட்டத்திலே மேல் முறையீடு செய்வதற்கு, பாதிக்கப்பட்டவர்கள் அல்லது வழக்குத் தொடுத்தவர்கள், மேல் முறையீடு செய்வதற்கு வழிவகை இல்லாமல் இருந்தது. அந்த வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்பதற்காக மேல்முறையீடு செய்யலாம் என்ற அளவுக்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிடு கிறபோது அதாரிட்டி யார் என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னார்கள். அவை எல்லாம் சட்டத்திலே வராது. ரூல்ஸ் & ரெகுலேஷன்ஸில் வரும். ரூல்ஸ் & ரெகுலேஷன்ஸில் நாம் தெளிவாகப் போட்டிருக்கிறோம்.

Authority to claim compensation (1) Application for claim fo compensation for damage or loss caused to the public Property owned by or in possession of or under the control of the authorities specified in column (1) of the Table below shall be made by the Officer specified in the Corresponding entry in column (2) thereof (hereinafter referred to as the prescribed officer)—

TABLE.

Authorities. (1)	Officer (2)
1. Central Government	Any officer authorised by the Central Government in this behalf.

2. State Government	Collector of the District in whose jurisdiction the public property was damaged.
3. Local authority . . .	Commissioner or Executive authority by whatever name called as the case may be.
4. Tamil Nadu Electricity Board ..	Secretary of the Tamil Nadu Electricity Board.
5. University	Registrar of the University.
6. Co-operative Society including Land Development Bank.	Chairman, President or the Special Officer of the Society concerned, as the case may be.
7. Corporate body referred to in Section 2 (4) (g).	Chairman, Managing Director or the Chief Executive Authority, as the case may be.
8. Corporation referred to in Section 2 (4) (h)	Chairman, Managing Director or the Chief Executive Authority, as the case may be.

என்று ரூல்ஸ் அண்டு ரெகுலேஷன்ஸ்-லே தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் குறிப்பிடுகிறபோது, பாதுகாப்புத் தர வேண்டுமென்கிறார்கள்.

முற்பகல் 11-45

பாதுகாப்புத் தருகின்ற முழுப் பொறுப்பையும் காவல் துறை அவ்வப்போது முன்கூட்டியே தெரிந்துகொண்டு இருக்கிற நிலையிலும், வேறு பல நிலைமைகளிலும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களே குறிப்பிட்டது போன்று, ஊர்வலங்கள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், மறியல் நடக்கின்ற களங்கள், ஆகியவற்றில் எல்லாம் பாதுகாப்புத் தருகிறார்கள். முக்கியமான பெரும் பெரும் தலைவர்கள் வருகின்றபோது, கூடுகின்ற கூட்டத்தைப் பொறுத்து, எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், யாராக இருந்தாலும் அப்படிப்பட்ட கூட்டங்களுக்கு நாம் பாதுகாப்புத் தருகிறோம். ஆனால் அந்தப் பாதுகாப்பையும் மீறி சில பல வேலைகளைச் செய்வார்களேயானால், அல்லது மதக் கலவரமோ அல்லது இனக் கலவரங்களோ மற்றவைகளோ ஏற்பட்டுவிடுமேயானால், அதற்கு இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருப்பது மிக மிக நல்லது. ஆனால் இதைக்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1994 மே 4

கடுமையாக நிறைவேற்ற வேண்டாம், நிறைவேற்ற வேண்டாம் என்று முன்பே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கடுமையை இன்னும் காட்டாமலேயே நாங்கள் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, 'கடிதோச்சி மெல்ல எறிக' என்றுதான் வள்ளுவப் பெருந்தகையாரும் கூறியிருக்கிறார். ஆகவே, ஓச்சும்போது கடுமையாக ஓச்சி, எறியும்போது இப்போது கொஞ்சம் மெல்ல எறிந்து கொண்டு இருக்கிறோம். இது சீர்பட்டு, செம்மைப்பட்டு வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால்—இப்படிப்பட்ட ஒரு சட்டம் இருக்கிறது என்பதே பல பேரை கட்டுப்படுத்துவதற்குப் பயன்படும். ஆகவே, அப்படி மீறி செய்வார்களேயானால் இப்போது இந்தச் சட்டம் மட்டும் இல்லாமல் போய் இருக்குமானால் வேறு எந்த வகையிலும் நடவடிக்கை எடுக்கமுடியாது. ஆகவேதான் அந்தப் பாதுகாப்புக்கு இது இருக்கும் என்பதைத் தவிர, அவர்கள் முறையீடு செய்கின்றபோது, பாதிக்கப்படுகின்றவர்கள் உள்ளபடியே அந்தக் குற்றத்தைச் செய்யாதவர்கள், அதிலே ஈடுபடுத்தப் படுகின்ற சூழ்நிலை ஏற்படுமானால், அதற்கு முறையீடு மற்றும் மேல்முறையீடு எல்லாம் இருப்பதன் காரணமாக, நியாயங்கள், நீதிகள் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்படும். நஷ்ட ஈடு கோருபவர்கள் யாரிடம் கோரிக்கை வைக்க வேண்டும் என்பதில், அதற்கு அத்தாரிட்டி யார் என்று இப்போது நோட்டிபை பண்ணியிருக்கிறோம். அவர்தான் நில வருவாய் ஆணையாளர். இனி அவரிடம் நஷ்டஈடு கோருவோர் மனு செய்யலாம் என்றும், இப்போது அத்தாரிட்டி என்பதில் குறிப்பிட்டு இருக்கிறோம். நில வருவாய் ஆணையாளர்—(Commissioner for Revenue Administration) என்றும் போடப்பட்டிருக்கிறது, அத்தாரிட்டி என்ற அளவிலே. ஆகவே இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றுவதன் மூலமாக ஏற்கெனவே இருக்கின்ற குறைபாடுகள் நீக்கப்படுவதற்கு வழிவகைகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே இது நிறைவேற்றப்பட்ட சட்டம்தான் என்பதைக் கூறி இதை நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Authority என்று Rules and Regulations -ல் ஏற்கெனவே சொல்லப்பட்டு இருப்பதாக மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நாம் ஒரு சட்டத்தைப் போடுகிறபோது, சட்டத்தில் அதைத் தெளிவாகச் சொல்லவேண்டும். Rules and Regulations-ஐ நாம் தேடிக் கொண்டிருக்க முடியாது. இந்த ஆக்ட்-ல் பொதுவாக இப்போது செய்துவிட்டால், 100 ஆண்டு காலம் கழித்த பின்னாலும்கூட, இந்த ஆக்ட் அப்படியே இருக்குமேயானால் நாம் அதைத்தான் பார்த்து ரெஃபர் செய்யவேண்டும். Rules and

Regulations-ஐ தேடிக்கொண்டு போக முடியாது. அதை எந்தக் கோர்ட்டிலும் செயல்படுத்த முடியாது. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறபோது ரெவின்யூ கமிஷனர்தான் அதற்கு அத்தாரிட்டி என்று சொன்னால், அதையே கூட நீங்கள் ஆக்ட்-ல் சொல்லி விடலாம். அதுகூட மனு கொடுப்பதற்குத்தான் அத்தாரிட்டியே ஒழிய, நஷ்ட ஈடு வழங்கக்கூடிய அத்தாரிட்டி யார் என்பதைப் பற்றி மிகத் தெளிவாக இல்லை. அப்பீல் எந்த அத்தாரிட்டியிடம் செய்யப் போகிறோம் என்பதும் தெரியவில்லை. நீங்கள் சொல்லும்போது 12 (a)-ல் சொல்லும்போது ''The Authority May be as prescribed '' என்று சொல்லியிருக்கிறீர்கள். யார் prescribed authority என்று சொல்லவில்லை therefore my humble request to the Government is that they should specify the prescrfbed authority in the act itself so that they can file that authorfty

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஞானசேகரன், திரும்ப விவாதம் வேண்டாம். உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: ஆகவே இந்த அத்தாரிட்டி என்பதை நீங்கள் சட்டத்திலேயே கொண்டுவந்துவிட வேண்டும். அதில் மாவட்ட நீதிமன்றங்களின் நீதிபதிகளையே வைக்கலாம். இல்லையென்றால் ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகளை வைக்கலாம். தீர்ப்பு சொல்பவர்கள் அவர்கள். மேல் முறையீட்டுக்கு ஆணையாளர் என்று நீங்கள் பிரிவு செய்யவேண்டும். அதை நீங்கள் உடனடியாக திருத்தமாகச் சேர்த்தால் நலமாக இருக்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களே, ஒரு வழக்கறிஞர்தான், சாதாரண வழக்கறிஞரை விட புகழ் பெற்ற பெருமை பெற்ற ஒரு வழக்கறிஞர். இப்படிப்பட்ட ஒரு சட்டம் வரும்போது. ஆக்ட்-லேயே எல்லா ரூல்சையும் ரெகுலேஷன்களையும் போடுவதில்லை. அதை முதலில் போட்டுவிட்டு பிறகு தான் Rules and Regulations எல்லாம் வகுப்பார்கள். ''Every claim for compensation for damage or loss caused to the public property shall made to the safd authority as may be preacrfbed''
என்று தான் பெரும்பாலான ஆக்ட்-ல் வரும் அதற்குப் பிறகுதான் Rules and Regulations கொண்டு வருவோம். ஆகவே அந்த முறையில்தான் Authority to claim Compensation என்பதை நான் முதலில் படித்துக் காண்பித்தேன். இப்போது நோட்டிஃபை பண்ணியிருக்கிற அளவுக்கு நில வருவாய் ஆணையாளர் (Commissioner for Revenue Administration இனி இவரிடம் நஷ்டஈடு

கோருவோர் மனு செய்யலாம் என்ற அளவுக்கு இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1994 மே 4] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

''1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுச் சொத்து (சேதம் மற்றும் இழப்பைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 14/1994) நிறைவேற்றப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1994). மாண்புமிகு சட்ட அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994 ஆம் ஆண்டு மாகாணச் சிறுவழக்கு நீதிமன்றங்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1994)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்

@ 29-4-1994 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.